ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) 1971-ஆம் ஆண்டு மோட்டார் வண்டி உடமையாளர் பயணிப் பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்டமுன்வடிவு

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, I move—

"That leave be granted for the introduction of the Tamil Nadu Fleet Operators Stage Carriages (Acquisition) Bill, 1971."

The motion was put and carried and leave was granted.

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

(இ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு மதுவிலக்கு (செல்திறனை நிறுத்தி வைத்தல்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, தமிழ் நாடு. . .

4. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ் நாடு 1971-ஆம் ஆண்டு மதுவிலக்கு (செல்திறனை நிறுத்தி வைத்தல்) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்வதை அனுமதித்தல் குறித்து.

DR. H. V. HANDE : Sir, I rise on a point of order. Can we we introduce the Bill when the matter had gone to Court and the Court is seized of the subject. That is the most important point. Even last time we had mentioned the subject here. The Hon. Minister said that no statutory provision need be made. That assurance was given by the Hon. Minister on the floor of the House. The text of the speech would reveal that. Later on an executive order was passed according to the wishes of the Hon. Minister for Law. That went to the Court. That was set at nought by the Ordinance. Now the Hon. Chief Minister is trying to regularise the Ordinance by bringing in an enactment. May I know whether it is in order and whether it will not be possible for the Hon. Minister for Law or Hon. Chief Minister to give guidance in this matter?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, இந்த மன்றத்திலே இதுபற்றி ஏற்கெனவே விளக்கப்பட்டிருக்கிறது. மதுவிலக்குச் சட்டத்தின்கீழ் ஒரு உத்தரவு போடலாம் என்று அரசு செய்தது. அந்த முடிவு ஆந்திர மாநிலத்திலும் பின்பற்றப்பட்டிருக்கிறது. அதைப் பின்பற்றி மத்திய அரசாங்கமும் அனுமதி அளித்து இருக்கிறது. அதற்கிடையில் அது சரிதானா என்று நீதி மன்றத்திற்குச் சிலர் சென்றார்கள் என்ற செய்தியை நான் லண்டனில் இருந்தபோது பத்திரிக்கையில் படித்தேன். உடனடியாக முதல்வர் அவர்களோடு தொடர்பு கொண்டு, நீதி மன்றத்திலே இது

பற்றி வாதித்தால் காலம் கடந்து நம்முடைய திட்டத்தைச் செயல் படுத்த வேண்டியிருக்கும் என்று கருதி, உடனடியாகச் சட்டம் பிறப்பிக்கவேண்டுமென்று அரசாங்கம் முடிவு எடுக்க வேண்டும் என்று ஆராய்ந்து, முடிவு எடுத்து, இது போல் ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த அவசரச் சட்டம் பிறப் பித்த முறை சரிதானா என்பதுபற்றி நீதி மன்றத்திலே பிரச்னை எழுப்பப்பட்டிருக்கிறது. இங்கே இந்த மசோதா கொண்டு வருவது வேண்டுமா வேண்டாமா என்பது பற்றி நீதி மன்றத்திலே பிரச்னை இல்லை. இது பிரச்னைக்கு உரிய பொருள் என்று நீதி மன்றத்திற்குச் சென்றவர்கள் கருதவில்லை என்று நினைக்கிறேன். ஆர்டினென்ஸ் பற்றி நீதி மன்றத்தில் என்ன வேண்டுமானால் செய்ய லாம். இந்த அவசரச் சட்டத்தைச் சட்டமாக்கவேண்டுமென்று கொண்டு வருவது அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி, நம் முடைய சட்ட விதிகளின் படி முறையாக இருக்கிறது. இதிலே எந்தவிதமான தவறும் இல்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் எழுப் பிய ஒழுங்குப் பிரச்சினைக்கு பதில் சொல்லுகிறேன். இப்பொழுது இந்த மசோதாவை அறிமுகப்படுத்துவதில் எந்தவிதமான சட்டப் பிரச்சினையும் இல்லை. ஆர்டினன்ஸ் கோர்ட்டின் முன்னால் இருக் கிறது. இதில் ஒன்றும் ஒழுங்குப் பிரச்சினை இல்லை என்பதால் மாண்புமிகு முதல் அமைச்சரவர்கள் மசோதாவை அறிமுகம் செய் வார்கள். (டாக்டர் ஹாண்டே தன் இடத்தில் எழுந்தார்) நான் என்னுடைய தீர்ப்பைக் கூறிவிட்டேன்.

Dr. H. V. HANDE : Mr. Speaker, Sir, I just want a clarification so that we will be enlightened because the Act is the same as the Ordinance. In fact we do not know what the Act is. From what information we had, I think it is the same as the Ordinance. When the Ordinance is *sub judice*, it tantamounts to the fact that the Act also is *sub judice*. We would like to know whether the Ordinance and the Act are one and the same. I would like to know from the Chief Minister what has actually happened. In fact yesterday we were not given a copy of this Bill. We were not given to understand that this Bill would be brought in here now. After we came to the House, just half an hour ago a supplementary agenda was circulated to us.

I will be happy to know from the Chief Minister how exactly this mistake has taken place or if he would pull up the department or the persons concerned with regard to the late manner in which it has been circulated. Just half an hour ago we were given a copy. If it was given yesterday we would have examined the whole thing and come prepared. Even that opportunity has not been given to us. That is why I raised the point of order. Even the Speaker can help us in this matter as to why this was not given to us yesterday and why it was given to us late only today, when the Government and the Chief Minister have decided about

it already. I want to know how this confusion took place. I would like the Chief Minister to help us by giving us an explanation with regard to this matter.

MR. SPEAKER : I invite the attention of Dr. H. V. Hande to Rule No. 92 which reads thus :—

"(1) If a motion for leave to introduce a Bill is opposed, the Speaker, after permitting, if he thinks fit, a brief statement from the member who moves and from a member who opposes the motion, may without further debate put the question thereon

(2) If such a motion is agreed to, the Bill may be introduced."

So, it is very clear that no debate is permitted. I now call upon the Chief Minister to move the motion for leave to introduce the Bill.

DR. H. V. HANDE : I raised a point of order.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ் நாடு 1971-ம் ஆண்டு மதுவிலக்கு (செல்திறனை நிறுத்தி வைத்தல்) சட்டமுன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு மதுவிலக்கு (செல்திறனை நிறுத்திவைத்தல்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டது.

ஏற்போர் 'ஆம்' என்றனர்.

DR. H. V. HANDE : Sir, I am opposing the Motion.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அறிமுகம் செய்ய அனுமதி வழங்கப்பட்டது.)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ் நாடு 1971-ம் ஆண்டு ஆயத்தீர்வை சட்டமுன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஆயத்தீர்வை சட்ட முன்வடிவை அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும், மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.